# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 04 வியாழக்கிழமை 17.04.2025 கதிர் 169









## ஜனாதிபதி அநுர தலைமையில் யாழ். கிட்டு பூங்காவில் பரப்புரை

யாழ்ப்பாணம், ஏப். 17

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் யாழ்ப்பாணம் நல்லூர் கிட்டு பூங்காவில் இன்று மாலை தேசிய மக்கள் சக்தியின் உள்ளூராட்சித் தேர்தல் பிரச்சாரக் கூட்டம் நடைபெற்றது.

இதில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, கடற்றொழில் மற்றும் நீரியல், கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், தேசிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் உரையாராறினார்கள்.

7➤

# நானும் ரௌடிதான்!

## யாழில் அநுர முன்னிலையில் அமைச்சர் சந்திரசேகர் உரை




யாழ்ப்பாணம், ஏப். 17

மக்களுக்காக தன்னை அர்ப்பணித்துச் செயற்படுவதுதான் ரௌடித்தனம் எனில், நானும் ரௌடி என்பதில் மகிழ்ச்சி என்று கடற்றொழில் மற்றும் நீரியல், கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் யாழ்ப்பாணம் கிட்டு பூங்காவில் இன்று மாலை நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது.

7➤

## ஏப்ரல் 24,25,28,29 இல் தபால் மூல வாக்களிப்பு



கொழும்பு, ஏப். 17

நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தபால் மூல வாக்களிப்புக்கான திருத்தப்பட்ட திகதிகளை தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அதன்படி, தபால் மூல

7➤

## வசாவிளானில் ஊடக சந்திப்புக்கு வந்தவர்களை அச்சுறுத்தும் வகையில் செயற்பட்ட பொலிஸார்

யாழ்ப்பாணம், ஏப். 17

காணி விடுவிப்பு தொடர்பில் ஜனாதிபதியிடம் கோரிக்கை வைப்பதற்கான ஊடக சந்திப்புக்கு வந்தவர்களை அச்சுறுத்தும் வகையில் பொலிஸார் செயற்பட்ட சம்பவம் இன்று ,டம்பெற்றது.

7➤





## யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் 2 கைதிகளிடையே வாக்குவாதம்

### சுடுநீர் வீச்சில் முடிவு; ஒருவர் வைத்தியசாலையில்



யாழ்ப்பாணம், ஏப். 17

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் இரண்டு கைதிகளுக்கு இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் சுடுநீர் வீச்சில் முடிவடைந்துள்ளது.

சிறைச்சாலையில் நேற்று புதன்கிழமை கைதிகள் இருவருக்கு இடையில்

7➤

## வவுனியாவில் மீட்கப்பட்ட சடலத்தை உறவுகளிடம் ஒப்படைப்பதில் தாமதம்





வவுனியா, ஏப். 17

சட்ட வைத்திய அதிகாரி வராமையால் வவுனியாயில் குளத்தின் அலைகரைப் பகுதியில் இருந்து இரத்தக் கறைக் காயங்களுடன் மீட்கப்பட்ட ,ளைஞரின் சடலத்தை ஒப்படைப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

வவுனியா, பாவற்குளத்தின், சூடுவெந்தபுலவு

7➤


- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# வற் (VAT) வரி தொடர்பில் வெளிவந்த தகவல்!



கொழும்பு, ஏப் 17

பெறுமதி சேர் வரி (ஏயுவு) திருத்தச் சட்டமூலத்தின் படி, உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் திரவப் பால் மற்றும் தயிர் ஆகியவை வற் (VAT) வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளதாக உள்நாட்டு வருவாய்த் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஏப்ரல் 11 ஆம் திகதியில் இருந்து பால் மற்றும் தயிர் மீதான வற் வரி நீக்கப்பட்டுள்ளதாக உள்நாட்டு வருவாய்த் திணைக்களம் அறிக்கை ஒன்றை வெளியிட்டு சுட்டிக்காட்டியுள்ளது.

பெறுமதி சேர் வரி (ஏயுவு) திருத்தச் சட்டமூலம் கடந்த ஏப்ரல் 9ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இதற்கு சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன 11 ஆம் திகதி ஒப்புதல் அளித்தார்.

அதன்படி குறித்த திகதியில் தொடர்புடைய சட்டம் அமுலுக்கு வந்ததிலிருந்து, உள்நாட்டுவருவாய்த் துறை பல வரித் திருத்தங்களைச் செயல்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி, திரவ பால் மற்றும் தயிர் தவிர, இலங்கை பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தால் மின் சார உற்பத்திக்காக இலங்கை மின்சார சபைக்கு வழங்கப்படும்நாப்தா மீதான வற் வரியும் நீக்கப்பட்டுள்ளதாக உள்நாட்டு வருவாய்த் துறை தெரிவித்துள்ளது.

எனினும் பெறுமதி சேர் வரி (ஏயுவு) திருத்தச் சட்டமூலத்தின் படி, வெளிநாடு வாழ் தனிநபர்கள் வழங்கும் டிஜிட்டல் சேவைகளுக்கு வற் வரியை விதிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, ஒக்டோபர் முதலாம் திகதி முதல் அமலுக்கு வரும் வகையில், இலங்கையில் வசிக்காத தனிநபர்கள் மின்னணு தளங்கள் மூலம் தனிநபர்களுக்கு வழங்கும் சேவைகளுக்கு வற் வரி பொருந்தும் என்று உள்நாட்டு வருவாய்த் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேலும், வணிக நோக்கங்களுக்காக பொருட்களை இறக்குமதி செய்யும் அல்லது ஏற்றுமதி செய்யும் அனைத்து நபர்களும் மதிப்பு கூட்டப்பட்ட வரி திருத்தச் சட்டத்தின் கீழ் பதிவு செய்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

# தலதா கண்காட்சியை முன்னிட்டு இன்று முதல் விசேட போக்குவரத்து நடவடிக்கை!

கொழும்பு, ஏப் 17

தலதா கண்காட்சியை முன்னிட்டு இன்றுமுதல் விசேட போக்குவரத்து நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தலதா கண்காட்சியை முன்னிட்டு, யாத்திரைக்கு வருவோரை ஏற்றிச் செல்லும் வாகனங்கள் கண்டி நகருக்குள் வருவதால், ஏற்படக்கூடிய போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக கண்டி நகருக்குள் நுழையும் வாகனங்கள் இன்று முதல் மட்டுப்படுத்தப்படும் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாத்திரிகர்கள் வருகை தரும் வாகனங்களுக்கு என்று விசேட வாகன நிறுத்துமிடங்கள் அமைக் கப்பட்டுள்ளதுடன், குறித்த பகுதிகளிலிருந்து ஸ்ரீ தலதா மாளிகைக்கு பேருந்து சேவைகள் மூலம் போக் குவரத்து வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

ஸ்ரீதலதா மாளிகை யாத்திரைக்குப் பின்னர், யாத்திரிகர்களை வாகன நிறுத்துமிடத்திற்குத் திருப்பி அனுப்புவதற்காக பொதுப் போக்குவரத்து சேவை செயல்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் அத்தியட்சகர் தயாள் இளங்கக்கோன் தெரிவித்தார். பொதுமக்களுக்கான விசேட தலதா கண்காட்சி, ஏப்ரல் 18ஆம் திகதி பிற்பகல் 3:00 மணி முதல் மாலை 5:30 மணி வரையிலும், 19ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை நண்பகல் 12:00 மணி முதல் மாலை 5:30 மணி வரையிலும் இடம்பெற உள்ளது.

இதன் காரணமாக, கண்டி ஸ்ரீ தலதா மாளிகை யாத்திரைக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் போக்குவரத்து திட்டத்தை செயல்படுத்துவது குறித்து பொலிஸார் விசேட அவதானம் செலுத்தியுள்ளனர்.

மக்களை சோதனை செய்தல், போக்குவரத்து கட்டுப்பாடுகள், வீதித் தடைகள் அமைத்தல் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக 10,000இற்கும் மேற்பட்ட பொலிஸ் அதிகாரிகள் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். மக்களின் பாதுகாப்பு மற்றும் போக்குவரத்துக் கட்டுப்பாட்டிற்காகப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பொலிஸ் அதிகாரிகளுக்கு உதவ, பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகள், பொலிஸ் மோப்ப நாய் பிரிவு, இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படை அதிகாரிகளும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

ஸ்ரீதலதா மாளிகைக்கு வருகை தரும் மக்கள் வெள்ளை நிற உடையை அணிய வேண்டும் என்றும், பாரிய பொருட்கள், கேமராக்கள், காணொளி உபகரணங்கள் மற்றும் பிற மின்னணு சாதனங்களை எடுத்து வருவதைத் தவிர்க்க வேண்டும் என்றும் பொலிஸ் ஊடகப்பிரிவு கேட்டுக்கொண்டுள்ளது.

SUHATHEHAM ATHULARSAALAI (PVT) LTD
சுகதேகம் ஆதுலர்சாலை (பீவீட) எல்டீடி
Neithal Beach city, Navatkuli, Jaffna
Company No- PV0031448

சித்த, ஆயுர்வேத, மேற்கத்ய இணைந்த மருத்துவ சேவை

Opening Hours - 9.00 am - 5.00 pm
Monday - Saturday

Treatment for Following Diseases
- Joint disorders சகல விதமான மூட்டுவாதங்கள்
- Paralysis பாரிசவாதம்
- Skin diseases தோல் நோய்கள்
- obesity உடற்பருமன்
- Gynecological problems - பெண்ணியல் நோய்கள்
- A norectal diseases மூல வருத்தம்
- Diabetic Mellitus நீரிழிவு
- Diabetic foot ulcers - நீரிழிவு புண்கள்
- Vericose vein Kidney stone சிறுநீரககல்
- Hypertension உயர்குருதியமுக்கம்
- cholesterol கொலஸ்திரோல்
- GGIT disorders சமிபாட்டுத் தொகுதியுடன் தொடர்பான நோய்கள்

இலவச மருத்துவ முகாம்
* போயா தினங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை நடைபெறும்.
* இலவசமாக குருதியமுக்கம் நிமை, உயரம், உடற்திணிவுச்சுட்டி என்பவற்றை அளவிட முடியும்

Special Treatments
- Full body Therapy
- Head Massage
- Foot Massage -
- Herbal Medicated Bath
- Decoction Bath
- Shirod hara
- skin care therapy
- Nasya
- wellness treatment through yoga & counselling
- Leech Therapy

அனைத்து விதமான குழந்தைகளுக்கான மூலிகைத் தாவரங்கள், கோரோசனை மாத்திரைகள், கிரந்தி எண்ணை என்பனவனற்றை இங்கு பெற்றுக்கொள்ளலாம்

Other activities ஏனைய சேவைகள்
Nursery Garden - Medicinal Plants (மூலிகை தாவரங்கள்)
Medicinal leach (லீச் அட்டை வளர்ப்பு)

Neithal Beach city
Amman Kovil Road,
Navatkuli Jafina

Contact No-0762942218

# 400,000 குடும்பங்களுக்கு அஸ்வெசும கொடுப்பனவு ஜனாதிபதியால் வெளியிடப்பட்ட மகிழ்ச்சி தகவல்!

கொழும்பு, ஏப் 17

எதிர்வரும் ஜுலை மாதத்தில் இருந்து அஸ்வெசும திட்டத்தில் 400,000 புதிய பயனாளிகள் இணைத்துக்கொள்ளப்படவுள்ளதாக ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

மன்னாரில் இன்று (17) இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போதே ஜனாதிபதி இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் அங்கு கருத்து தெரிவிக்கையில்,

எமது ஆட்சியில், எரிபொருள் விலையைக் குறைத்தோம், மின்சார விலையைக் குறைத்தோம்,

அஸ்வெசும கொடுப்பனவை உயர்த்தினோம்.

பாடசாலைப் பிள்ளைகளுக்கு சீருடை மற்றும் கற்றல் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு கொடுப்பனவு வழங்கியுள்ளோம்.

மன்னார் - இராமேஸ்வரத்திற்கு இடையில் மீண்டும் படகு சேவைகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதுடன் புத்தளம் - மன்னார் பாதையை இணைப்பதற்கு நடவடிக்கை எடுப்போம் என தெரி வித்திருந்தார்.

மேலும், வடக்கில் இடம்பெற்ற போர் காரணமாக, மக்களின் நிலங்களை அரசாங்கம் கையகப்படுத்த வேண்டியிருந்தது என்றும், சில வீதிகள் மூடப்பட வேண்டியிருந்தது என்றும் கூறிய ஜனாதிபதி, தேசிய மக்கள் சக்தி இந்தப் பிரச்சினைகள் அனைத்தையும் தீர்த்து மக்கள் தங்கள் பணிகளைச் சுதந்திரமாகச் செய்யக்கூடிய ஒரு நாட்டை உருவாக்கும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.





## முத்தையன்கட்டு பகுதியில் சுகாதார குறைபாடுகளுடன் இயங்கிய வெதுப்பகம் - பொதுச்சுகாதார பரிசோதகர்களின் அதிரடி!

கொழும்பு, ஏப் 17

முல்லைத்தீவு- ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட முத்தையன்கட்டு பகுதியில் இயங்கி வரும் வெதுப்பகம் ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட திடீர் பரிசோதனையின் போது, மனித நுகர்விற்கு ஒவ்வாத 25 கிலோவிற்கும் அதிகமான உற்பத்தி பொருட்கள் அழிப்பு செய்யப்பட்ட சம்பவம் இன்றையதினம் இடம்பெற்றுள்ளது.

முத்தையன்கட்டு பகுதியில் இயங்கி வரும் வெதுப்பகம் ஒன்றிற்கு ஒட்டுசுட்டான் வைத்திய அதிகாரியின் தலைமையில் பொதுச்சுகாதார பரிசோதகர்களினால் திடீர் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது மனித நுகர்விற்கு பொருத்தமற்ற 25 கிலோகிராமிற்கு மேற்பட்ட வெதுப்பக உற்பத்தி பொருட்கள் கைப்பற்றப்பட்டு உடனடியாக அழிப்பு செய்யப்பட்டது.

அத்துடன் குறித்த வெதுப்பகம் சுகாதார குறைபாடுகளுடன் இயங்கி வருவதனால் குறைபாடுகளை நிவர்த்தி செய்யப்படும் வரை மூடப்பட்டுள்ளது. வெதுப்பகத்தில் உள்ள சுகாதார குறைபாடுகளை 10 நாட்களில் நிவர்த்தி செய்யப்படவேண்டும் எனவும், குறைபாடுகளை சார் செய்து விட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொதுச்சுகாதார பரிசோதகர், வெதுப்பக உரிமையாளரை எச்சரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பின்னணியில் புலனாய்வுத்துறையினர்

கொழும்பு, ஏப் 17

இலங்கையில் கடந்த 2019ஆம் ஆண்டு ஏப்ரல் 21இல் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பின்னணியில், நாட்டின் புலனாய்வுத்துறையினர் இருப்பது தெரியவந்துள்ளதாக சமூக மற்றும் சமாதான நிலையத்தின் பணிப்பாளர் ரொஹான் சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று(16) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கையில்,

ஏப்ரல் 21 தாக்குதல்களின் பின்னணியில் நாட்டின் புலனாய்வுத்துறையினர் இருக்கின்றார்கள், தாக்குதல்களை மேற்கொண்டவர்களுடன் நெருங்கிய தொடர்பைப் பேணினார்கள் என்பது விசாரணை அறிக்கைகள் ஊடாக எமக்குத் தெரியவந்துள்ளது.

அதன்படி தாக்குதலின் பின்னணியிலிருந்த பிரதான சூத்திரதாரி யார் என்பதை அடையாளம் காண முடியாதளவிலேயே நாட்டின் பாதுகாப்புத்துறை காணப்படுவதாக சமூக மற்றும் சமாதான நிலையத்தின் பணிப்பாளர் ரொஹான் சில்வா தெரிவித்துள்ளார்.

## பாணந்துறை கடலில் மூழ்கி இரு சிறுவர்கள் மாயம்!

பாணந்துறை கடற்கரைக்கு நீராடச் சென்ற இரு சிறுவர்கள் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளதாக பாணந்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பண்டாரகம மற்றும் வத்தளை பிரதேசத்தைச் சேர்ந்த நண்பர்கள் மற்றும் உறவினர்கள் குழு ஒன்று நேற்று (16) மாலை பாணந்துறை கடற்கரைக்கு சுற்றுலா சென்றிருந்தனர்.

இதன்போது பாணந்துறை கடலில் நீராடிக்கொண்டிருந்த வேளையில் ஏற்பட்ட பேரலையில் சிக்கி ஐந்து பேர் நீரில் மூழ்கியுள்ளனர்.

இந்த வேளையில் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த பாணந்துறை கடலோர கடற்படை மற்றும் பொலிஸ் உயிர்காக்கும் பிரிவினர் இணைந்து நீரில் மூழ்கிய மூன்று பேரை மீட்டனர்.

எனினும் ஏனைய இரண்டு சிறுவர்கள் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளனர்.

நீரில் மூழ்கி காணாமல் போனவர்கள் மொஹமட் இர்பான் மொஹமட் முஹம்மது என்ற 15 வயது சிறுவனும், பண்டாரகம, அட்டலுகம பகுதியைச் சேர்ந்த யாசிர் அரபாத் அகமது என்ற மாணவனும் ஆவர்.

நீரில் மூழ்கிய இருவரதும் சடலங்கள் இன்னமும் கண்டறியப்படாத நிலையில், கடற்படையினர் தேடுதல் நடவடிக்கையை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## விசேட பேருந்து சேவை தொடர்பில் பல முறைப்பாடுகள்!

கொழும்பு, ஏப் 17

சித்திரை புத்தாண்டை முன்னிட்டு இயக்கப்பட்ட விசேட பேருந்து சேவை தொடர்பில் 187 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பயணிகளிடமிருந்து 1955 என்ற துரித இலக்கம் மூலம் குறித்த முறைப்பாடுகள் பெறப்பட்டுள்ளதாக போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் நயோமி ஜயவர்தன தெரிவித்தார்.

அங்கீகரிக்கப்பட்ட பேருந்து கட்டணங்களை வசூலிக்காதது தொடர்பாக 63 முறைப்பாடுகள் கிடைக்க பெற்றுள்ளதாகவும், டிக்கெட்டுகள் வழங்கப்படாதது குறித்தும் முறைப்பாடுகள் வந்துள்ளதாகவும் தெரிவித்திருந்தார்.

குறித்த முறைப்பாடுகள் தொடர்பில் புது வருடத்திற்கு பின்னர் விசாரணைகள் நடாத்தப்படும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## மரத்திலிருந்து தவறி விழுந்து 16 வயது மாணவன் உயிரிழப்பு!

எல்பிட்டிய பகுதியில் இன்று (17) நடைபெறவிருந்த புத்தாண்டு விழாவை முன்னிட்டு கிரீஸ் மரத்தை தயார் செய்யும் போது, அதிலிருந்து தவறி விழுந்து பாடசாலை மாணவன் ஒருவர் உயிரிழந்தார். 16 வயதுடைய பாடசாலை மாணவர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பில் தெரியவருவது,

பிடிகல, அமுகொட சிறிவிஜயாராம விகாரைக்கு அருகிலுள்ள விளையாட்டு மைதானத்தில் புத்தாண்டு விழாவை நடத்துவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன.

இதன் போது புத்தாண்டு விழாவிற்காக கிரீஸ் மரத்தை தயார் செய்துகொண்டிருந்த வேளையில், துரதிர்ஷ்டவசமாக 40 அடி உயரமான கிரீஸ் மரத்திலிருந்து பாடசாலை மாணவன் தவறி விழுந்துள்ளான். தவறி விழுந்த பாடசாலை மாணவனை எல்பிட்டிய ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக பிடிகல பொலிஸார் தெரிவித்தனர். உயிரிழந்த மாணவன் இம்முறை க.பொ.த. பரீட்சைக்கு தோற்றி பெறுபேறுகளுக்காக காத்திருந்தவர் என்று கூறப்படுகிறது. உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக எல்பிட்டிய ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பிடிகல பொலிஸார் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நக்சலிசத்தை ஒழிக்க பாதுகாப்பு படை முக்கிய பங்கு வகிக்கும் என்று அமித்ஷா நம்பிக்கை



''2026ம் ஆண்டிற்குள் நக்சலித்தை ஒழிப்பதில் மத்திய ஆயுதப்படைகள் முக்கிய பங்கு வகிக்கும்'' என மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா தெரிவித்துள்ளார்.

மத்திய பிரதேச மாநிலம் நீமுச் மாவட்டத்தில் நடந்த மத்திய ரிசர்வ் போலீஸ்படையின் 86வது தின விழாவில் அமித்ஷா பேசியதாவது: மத்திய பாதுகாப்பு படையின் நடவடிக்கையால், நக்சல் தாக்குதல் 70 சதவீதம் குறைந்துள்ளது. பாதுகாப்பு படையினரின் துணிச்சல் மற்றும் அர்பணிப்புக்காக இந்தியா பெருமை கொள்கிறது.


சத்தீஸ்கரில் நக்சலைட்டுகள் 22 பேர் கைது ஏராளமான ஆயுதங்கள் பறிமுதல்

பாதுகாப்புப் படைகளின் அர்ப்பணிப்பு வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படும். நாட்டிலேயே மட்டுமல்ல, உலகிலேயே மிகப்பெரிய துணை ராணுவப் படை என்ற பெருமையை மத்திய ரிசர்வ் போலீஸ் படை பெற்றுள்ளது.

அவர்கள் பல சந்தர்ப்பங்களில், நாட்டின் கவுரவத்தை பாதுகாத்துள்ளனர். மார்ச் 31ம் தேதிக்குள் நாட்டை நக்சல் இல்லாத நாடாக மாற்றுவோம். நக்சலித்தை ஒழிப்பதில் மத்திய ஆயுதப்படைகள் முக்கிய பங்கு வகிக்கும். இவ்வாறு அமித்ஷா பேசினார்.

(ஐ)

## சத்தீஸ்கரில் நக்சலைட்டுகள் 22 பேர் கைது ஏராளமான ஆயுதங்கள் பறிமுதல்



சத்தீஸ்கர் மாநிலம் பிஜாப்பூர் மாவட்டத்தில் மூன்று இடங்களில் பாதுகாப்பு படையினர் நடத்திய சோதனையில் நக்சலைட்டுகள் 22 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் இருந்து வெடிபொருட்கள், ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டு உள்ளது.

சத்தீஸ்கர் மாநிலம் பிஜாப்பூர் மாவட்டத்தில் நக்சலைட்டுகள் பதுங்கி இருப்பதாக, பாதுகாப்பு படையினருக்கு தகவல் கிடைத்தது. பிஜாப்பூர் மாவட்டத்தில் மூன்று இடங்களில் பாதுகாப்பு படையினர் மற்றும் போலீசார் இணைந்து நடத்திய சோதனையில் நக்சலைட்டுகள் 22 பேர் கைது செய்யப்பட்டனர். டெக்மெட்லா கிராமத்திலுள்ள வனப்பகுதியில் 7 பேரும், பெல்சார் கிராமத்தில் 6 பேரும், கண்டாகர்கா கிராமத்தில் 9 பேரும் என மொத்தம் நக்சலைட்டுகள் 22 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என போலீசார் தெரிவித்து உள்ளனர்.

கைது செய்யப்பட்ட நக்சல்களிடமிருந்து துண்டுப்பிரசுரங்கள், வெடிபொருட்கள் மற்றும் ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. அவர்கள் அனைவரும் 19 முதல் 45 வயதுக்குட்பட்டவர்கள் என பாதுகாப்பு படையினர் தெரிவித்தனர்.

(ஐ)

## பிரியங்காவுடன் வந்து ஆஜரானார் ராபர்ட் வாத்ரர் 3வது நாளாக அமலாக்கத்துறை விசாரணை

குருகிராம் நில வழக்கு தொடர்பாக தொழிலதிபர் ராபர்ட் வாத்ரா, தனது மனைவியும், வயநாடு எம்.பி.,யுமான பிரியங்காவுடன் வந்து அமலாக்கத்துறை முன்பு ஆஜரானார்.

கடந்த 2018ல் குருகிராமில் உள்ள 3.5 ஏக்கர் நிலம் வாங்கி விற்றதில் இரு நிறுவனங்கள் இடையே சட்டவிரோத பண பரிமாற்றம் நிகழ்ந்ததாக காங்கிரஸ் பொதுச்செயலாளரும், வயநாடு தொகுதி எம்.பி.,யுமான பிரியங்காவின் கணவர் ராபர்ட் வாத்ரா மீது குற்றச்சாட்டு எழுந்தது. இந்த வழக்கில் ஏற்கனவே அமலாக்கத்துறை இருமுறை சம்மன் அனுப்பியும், வாத்ரா ஆஜராகாமால் இருந்து வந்தார்.

இந்த சூழலில், நேற்றும் (ஏப்.,16), நேற்று முன்தினமும் (ஏப்.,15) அமலாக்கத்துறை அதிகாரிகள் முன்பு ராபர்ட் வாத்ரா ஆஜரானார். 12 மணிநேரத்திற்கும் மேலாக அவரிடம் விசாரணை நடத்தப்பட்டது.

இந்த நிலையில், 3வது நாளாக ராபர்ட் வாத்ரா அமலாக்கத்துறை முன்பு ஆஜராக வந்தார். அவருடன் பிரியங்காவும் வந்திருந்தார். இன்றும் வாத்ராவிடம் பல மணி நேரம் விசாரணை நடத்தப்படும் என்று தெரிகிறது.

(ஐ)

## இளம் தலைவர்கள் பட்டியலில் மத்திய அமைச்சர் ராம் மோகன்



உலக பொருளாதார மன்றத்தின் 2025ம் ஆண்டுக்கான உலகளாவிய இளம் தலைவர்கள் பட்டியலில் மத்திய சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் ராம் மோகன்நாயுடு இடம்பெற்றுள்ளார்.

உலக பொருளாதார மன்றம் (றுழசடன நுஉழழெஅைஉ குழசரஅ) 2025ம் ஆண்டுக்கான இளம் உலகளாவிய தலைவர்களின் பட்டியலை வெளியிட்டுள்ளது. இதில் பல்வேறு துறைகளில் முத்திரை பதித்த 40 வயதுகுட்பட்ட 116 நபர்கள் இடம்பெற்றுள்ளனர். இதில் இந்தியர்கள் 7 பேர் இடம் பெற்றுள்ளனர். அதன் விபரம் பின்வருமாறு:

1. அனுராக் மாலூ, மலையேறுபவர், தொழில்முனைவர் மற்றும் பேச்சாளர்.

2. நிபுன் மல்ஹோத்ரா- தொழில்முனைவோர் மற்றும் ஊனமுற்றோர் உரிமை ஆர்வலர் ஆவார்.

3. ரித்தேஷ் அகர்வால்- தொழில்முனைவோர், ழுலுழு ஹோட்டல்ஸ் நிறுவனர்.

4. அலோக்மெடிகேபுரா அனில்- நெக்ஸ்ட் பிக் இன்னோவேஷன் லேப்ஸின் நிறுவனர் மற்றும் நிர்வாக இயக்குநர்.

5. ராம் மோகன் நாயுடு, அரசியல்வாதி, மத்திய விமான போக்குவரத்து துறை அமைச்சர்

6. நடராஜன் சங்கர்- பாஸ்டன் கன்சல்டிங் குழுமத்தின் நிர்வாக இயக்குநர் மற்றும் பங்குதாரர்.

7. மானசி சுப்பிரமணியம் - தலைமை ஆசிரியர் மற்றும் பெங்குயின் ரேண்டம் ஹவுஸ் இந்தியா நிறுவனத்தின் துணைத் தலைவர்.

இந்த பட்டியில் இடம் பிடித்துள்ள, மிகவும் பிரபலமானவர் தான் மத்திய அமைச்சர் ராம் மோகன் நாயுடு.

யார் இந்த ராம் மோகன் நாயுடு?

ஆந்திராவில் டிசம்பர் 18ம் தேதி 1987ம்ஆண்டு ராம்மோகன்நாயுடு பிறந்தார். இவருக்கு வயது 37.

இவர் தெலுங்கு தேசம் கட்சியை சேர்ந்த அரசியல்வாதி.

இவர் லோக்சபா தேர்தலில், ஸ்ரீகாகுளம் லோக்சபா தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்று எம்.பி., ஆனார். இவர் விமான போக்குவரத்து துறை அமைச்சராக உள்ளார். இவர் தெலுங்கு தேசம் கட்சியின் தேசிய பொதுச்செயலாளராக உள்ளார்.

இது குறித்து ராம்மோகன்நாயடு கூறியதாவது: உலகப்பொருளாதார மன்றத்தால் இளம் உலகளாவிய தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது ஒரு மரியாதைக்குரிய விஷயமாகும்.

இந்த அங்கீகாரம் எனக்கு மட்டுமல்ல. மாற்றத்தை ஏற்படுத்த கனவு காணும் ஒவ்வொரு இளம் இந்தியருக்கும் அர்ப்பணிக்கிறேன். இவ்வாறு அவர் கூறியுள்ளார். (ஐ)

# கல்வியா – செல்வமா – உயிரா?

ரமாதேவி ரத்தினசாமி



கையில் ஏடுகளுடன் அங்குமிங்கும் பௌத்த பிக்குகள் நடமாடிக்கொண்டிருந்தனர். எதிர்ப்படுவோர் மிகுந்த மரியாதையுடன் அந்தப் பிக்குகளை வணங்கிச் சென்றனர். ஏராளமான இளைஞர்களின் நடமாட்டம் தெரிந்தது. ஒருபுறம் நெசவு செய்யும் ஒலிகள் சன்னமாகக் கேட்டன. ஓவியக்கூடங்களும் சிற்பக்கூடங்களும் ஆங்காங்கே தென்பட்டன. மொழிப்பாடங்கள், மருத்துவம், வானவியலுக்கென தனித்தனி பகுதிகள் காணப்பட்டன. கண்ணில் படும் அத்தனை பேரிலும் சாதாரண குடிமக்களைக் காண இயலவில்லை. அனைவரும் உயர்சமூக மக்களென பார்த்த மாத்திரத்தில் அறிய முடிந்தது. ஆம், மதம் பரப்பும் அந்தப் பௌத்த விகாரைகளே கலவிக்கூடங்களாகவும் இயங்கிக்கொண்டிருந்தன. சமூகத்தின் உயர் அந்தஸ்தில் இருந்த துறவிகளுக்கும் பிக்குகளுக்கும் மட்டுமே கல்வி போதிக்கப்பட்டது. அவர்களை விடுத்து மேலதிகமாக அரசர் குலத்தவர்களும் வசதிபடைத்த செல்வாக்குள்ளவர்களின் பிள்ளைகளும் மட்டுமே உள்ளே நுழையமுடியும். மதம் சார்ந்த கல்வியோடு, உலோக வேலை, நெசவு, மரவேலை, ஓவியம், சிற்பக்கலை போன்றவை கற்றுக்கொடுக்கப்பட்டன. பிற சமூகத்தினருக்குக் கல்வி என்பது பௌத்த விகாரைகளை ஏக்கத்தோடு பார்த்து பெருமூச்சு விடும் விஷயமாகவே இருந்தது.

ஆசியாவின் மிக உயர்ந்த எழுத்தறிவு வீதம் கொண்ட இலங்கை 2500 ஆண்டுகள் மிக நீண்ட கல்விப் பாரம்பரியம் கொண்ட தேசமாக விளங்குகிறது. வங்கதேசத்திலிருந்து தந்தையால் நாடுகடத்தப்பட்ட விசயனின் இலங்கை வருகைக்குப் பின் இந்தியாவின் கல்விசார்ந்த முறைமைகள் இலங்கையிலும் பரவின. இந்தியாவிலிருந்து பிராமணர்கள் வரவழைக்கப்பட்டு குருகுலக்கல்வி முறைகள் ஏற்படுத்தப்பட்டன. அசோகப் பேரரசரின் மகன் மகிந்தனின் வருகையுடன் பௌத்த சமயப் போதனைகள் ஆரம்பமாகின. இலங்கை மன்னன் தேவநம்பிய தீசனை மகிந்தர் பௌத்தத்திற்கு மதம் மாற்ற, அதன் பலனாக, மகிந்த தேரருக்கு மகாமேக நந்தவனத்தை மன்னர் நன்கொடையாக வழங்க, இலங்கையின் முதல் பௌத்தக் கல்வி நிலையம் தோன்றியது. பிக்குமார்களே கல்வி கற்பிக்கத் துவங்கினர். அந்த விகாரைகள் பிக்குமார்களின் வதிவிடங்களாகவும் கல்வி பயிலும் இடங்களாகவும் படிப்படியாக வளர்ந்து பௌத்தக் கல்வி நிலையங்களாக மாற்றம் பெற்றன.

பௌத்த சமயத்தை வளர்ச்சியுறச் செய்வதன் மூலம், இலங்கைச் சமுதாயத்தை பௌத்த கலாச்சாரமிக்க நாடாக மாற்ற வேண்டும் என்ற நோக்கத்தை நிறைவேற்றிக்



கொள்ள தேரவாத, மகாயான சிந்தனைகளின் மூலம் கல்வி புகட்டப்பட்டது. கிராமம் தோறும் ‘பன்சல’வில் ஆரம்பக்கல்வியும், ‘பிரிவேனா’வில் இடைநிலைக்கல்வியும், மகாவிகாரைகளில் உயர்கல்வியும் வழங்கப்பட்டன. சோதிடம், மருத்துவம் போன்ற உயர்பாடங்களும் பாளி, சமஸ்கிருதம் போன்ற மொழித் துறைப்பாடங்களும் உயர் சிறப்பு தொழிற்பாடங்களாகச் சட்டம், வானவியல், கட்டிடக்கலை, ஓவியம் போன்றவையும் முக்கியத்துவம் பெற்றன.

1505இல் இலங்கையை போர்த்துகீசியர்கள் ஆக்ரமித்த பின்னர், மதத்தையும் மொழியையும் பரப்ப கைக்கொண்ட சாதனமாகக் கல்வி மாறியது. கல்விப் பொறுப்பு கத்தோலிக்க மதகுருக்களிடம் ஒப்படைக்கப்பட்டது. பாரிஸ் பாடசாலை, ஆரம்ப பாடசாலை, கல்லூரி, ஆதரவற்றோருக்கான பாடசாலை என பல்வேறு கல்வி நிலையங்களைத் துவங்கினர். இக்காலத்தில் கல்வியின் நோக்கம், கத்தோலிக்க மதத்தைப் பரப்புதலும், அதன்மூலம் தமது வியாபாரத்திற்கான ஒத்துழைப்பை அதிகரித்துக்கொள்வதுமாகவே இருந்தது. அதனால் அவர்களது கலைத் திட்டம் சமயம் சார்பான பாடங்களுக்கே முக்கியத்துவம் அளித்தது. முதன்முதலில் மேற்கத்தியக் கல்வியை இலங்கையில் அறிமுகம் செய்தவர்கள் போர்த்துகீசியர்கள்தாம்.

1658இல் ஒல்லாந்தர்கள் காலத்தில் கல்விக்கான முழுப் பொறுப்பையும் அரசே செயல்படுத்தியது தமது புரட்டஸ்தாந்து மதத்தைப் பரப்ப கட்டாயக் கல்வியை அறிமுகம் செய்தனர். 15 வயதுவரை இலவச கட்டாயக்கல்வியை தந்ததுடன், பாடசாலை செல்வதற்கு முன்நிபந்தனையாக கிறிஸ்தவ சமயத்தைத் தழுவ வேண்டும் எனவும், தேவாலயங்களுக்கு ஒழுங்காகச் செல்ல வேண்டுமெனவும் வலியுறுத்தப்பட்டன. புரட்டஸ்தாந்து சபையைச் சார்ந்தவர்களே ஆசிரியர்களாகவும் நியமிக்கப்பட்டனர்.

1798இல் இலங்கைக்குள் காலடி எடுத்து வைத்த ஆங்கிலேயர்கள் கல்வியில் மாறாத தடங்களைப் பதித்தனர். பல்வேறு சீர்திருத்தங்கள் சடசடவென நடந்தன. ஆங்கிலம் சகல மாணவர்களுக்கும் கற்பிக்கப்பட்டது. ஆங்கிலம் என்றாலே தெறித்து ஓடுகின்ற கலாச்சாரம் அன்றும் இருந்ததாலோ என்னவோ இப்பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை ஆரம்பத்தில் சொற்பமாகவே இருந்தது. 1805 முதல் 1818 வரை மிஷனரிகள் யுகம் என்று சொல்லும் அளவிற்கு மிஷனரிகள் இலங்கைக்கு வருகை தந்தன. இலங்கையின் கல்வி வரலாற்றில் புதிய திருப்பம் ஏற்பட்டது. அதிக அளவில் பாடசாலைகள் உருவாக்கப்பட்டன. இருமொழி கற்றவர்கள் அதிக அளவில் உருவாக்கப்பட்டனர். இருந்தாலும், கல்வியைப் பெறுவது ஆண்களுக்கு லகுவாக இருந்த அளவு பெண்களுக்குச் சாத்தியப்படவில்லை. பல்வேறு நாடுகளிலிருந்து வந்த மிஷனரிகளில் சிறந்ததாகவும், பொருளாதார வளம் மிக்கதாகவும் அமெரிக்க மிஷனரியே இருந்தது. கத்தோலிக்கத் திருச்சபை நகரமையங்களில், நிர்வாக மையங்களில் மட்டுமே பள்ளிகளைக் கட்டி வந்த சூழலில், அமெரிக்கத் திருச்சபை யாழ்ப்பாணத்தின் குக்கிராமங்களில்கூடப் பள்ளிகளையும் மருத்துவமனைகளையும் நிறுவின. கல்வியூட்டி, மதம் மாற்று என்பதே அமெரிக்கர்களின் கோட்பாடாக இருந்தது. அளித்த கல்விக்கு நன்றிகடனாக மதம் மாறச் செய்தனர். இவர்கள் பொது அறிவையும் கல்வித் திட்டத்தில் இணைத்தனர்.

சைவ வித்தியாபிவிருத்திச் சங்கத்தின் வளர்ச்சியில் முக்கியப் பங்காற்றிய ‘இந்துபோர்ட்’ இராசரத்தினம், அமெரிக்க மிஷினரிகளுக்குப் போட்டியாக, இந்து மதத்தைச் சேர்ந்த பள்ளிக்கூடங்களைக் கட்டத் துவங்கினார். தெருவின் ஒரு தொங்கலில் மிஷினரி பள்ளிக்கூடங்கள் இருந்தால், சைவ ப்ரகாசா, மங்கையர்க்கரசி, சன்மார்க்கா, இந்துக்கல்லூரி, செங்குந்தார் போன்ற சைவப் பள்ளிக்கூடங்களை மற்றொரு தொங்கலில் கட்டத் துவங்கினர். யாழ்ப்பாணக்குடா நாடு, முல்லைத்தீவு, பதுளை, புத்தளம், நாவலப்பிட்டி, மன்னார், கிளிநொச்சி, வவுனியா, ஊர்காவற்றுறை, நெடுந்தீவு முதலான இடங்களில் 174 சைவப் பாடசாலைகள் உட்பட, முன்னூறுக்கும் மேற்பட்ட பாடசாலைகளை உருவாக்கி இயங்கச் செய்தார். இது குறித்து ஆய்வு செய்ய, ஓய்வு பெற்ற பிஷப், அன்டர்சன் இங்கிலாந்திலிருந்து அனுப்பப்பட்டார். ஆய்வின் முடிவில் இலங்கைத் தீவின் மொத்தப் பள்ளிக்கூடங்களில் 49 சதவீதமான பள்ளிக்கூடங்கள் யாழ்ப்பாணத்தில் மட்டுமே இருப்பதான புள்ளி விபரத்தை அன்டர்சனின் அறிக்கை கூறுகிறது. இந்தத் திருச்சபைகளுக்கும் இந்துபோர்டுக்குமான போட்டிகளின் விளைவாகத்தான் நவீன யாழ்ப்பாணம் தோன்றியது. 1870இல் இலங்கை மருத்துவக் கல்லூரியும் இலங்கை சட்டக் கல்லூரியும் உண்டாக்கப்பட்டன.

தாய்மொழிக்கல்வி இயக்கத்தின் தந்தை எனப் போற்றப்படும் சர்.பொன். அருணாச்சலம் ஆங்கிலக் கல்வித் திட்டத்தில் அதிருப்தி கொண்டு, 1900, ஜுலையில் தாய்மொழிக்கல்வியை வலியுறுத்தி புதிய கல்வித் திட்டம் தொடர்பான அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்தார். “இங்கிலாந்தில் உள்ள ஆரம்பப் பாடசாலைகளில் ஆங்கிலத்தைத் தள்ளிவிட்டு ஜெர்மானிய மொழியைப் போதனா மொழியாக்கினால் எவ்வாறு இருக்கும் என யோசித்துப் பாருங்கள்?” என்று கேள்வி எழுப்பினார்.

1931ஆம் ஆண்டின் டொநமூர் சீர்திருத்தத்தின்படி 21 வயதில் அனைவருக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டு, சட்டசபை உருவாக்கப்பட்டது. இன்றைக்கு 98% படித்தவர்கள் வாழுகின்ற நாடு என்று இலங்கையர்கள் பரவசப்பட்டுக்கொள்வதற்கு அடித்தளமிட்டது, அன்று கல்வி அமைச்சராகப் பொறுப்பேற்ற உறற கன்னங்கராய் ஏற்படுத்திய இலவசக்கல்வி முறைதான். பணம் படைத்தோருக்கும் வெள்ளையர்களின் ஆதரவாளர்களுக்கும் மட்டுமே கல்வி என்றிருந்த நிலையைத் தூக்கியெறிந்து ஏழைக்கும் கல்வி வரமாகக் கிடைத்தது. 1931 முதல் 1948 வரையிலான வருடங்களில் கல்வியில் பாரிய மாற்றத்தை ஏற்பட்டுத்தியமையால் இது கன்னங்கராய் யுகம் எனப்படுகிறது.

இந்தியாவைப் போலவே இலங்கையும் நீண்ட காலமாக ஐரோப்பியர்களின் கல்வி முறையையே அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியும் உலக வங்கியும் இலங்கையின் கல்விக்கொள்கையில் நேரடியான முழுமையான பங்களிப்பினைச் செய்கின்றன. அனைவருக்கும் கல்வி என்பதுதான்



இலங்கையின் கல்விக்கொள்கை, ஆனால் தரமான கல்வி என்பது இந்தியாவைப் போல இலங்கையிலும் சவாலாகவே உள்ளது.

நாடு முழுவதும் 43 லட்சம் மாணவர்கள், 2,47,000 ஆசிரியர்கள் 10,154 பாடசாலைகள் கொண்டதாக இலங்கைக் கல்வித்துறை விளங்குகிறது. ஆனால், பட்ஜெட்டில் 2% புனீ மட்டுமே கல்விக்காக ஒதுக்கப்படுகிறது. ஆரம்பக் கல்வி துவங்கி, பல்கலைக்கழகம் வரை ஏழை, பணக்காரன், சாதி, மதம், இனம் மொழி போன்ற எந்தவிதப் பாகுபாடுமின்றி அனைவருக்கும் பொதுவானதாக இலங்கைக் கல்வித் திட்டங்கள் காணப்படுகிறது. அரசுப்பள்ளிகளிலுள்ள 12 லட்சம் மாணவர்களுக்குப் பகல் உணவு வழங்கும் திட்டம் இருக்கிறது. காலை 7.30க்குப் பள்ளி துவங்கும் பாடசாலைகள் மாலை 1.30 மணியுடன் முடிவடைகிறது. சிங்களம், தமிழ், ஆங்கிலம் என்ற மும்மொழி காணப்பட்டாலும், அனைத்துப் பாடசாலைகளிலும் மும்மொழிகள் கற்றுத் தரப்படுவதில்லை. செய்முறை அனுபவங்களைவிட மனப்பாடக் கல்வியே இங்கும் இருந்தாலும், எனது பார்வையில் கல்வித்தரம் சிறப்பாக இருப்பதாகவே தெரிகிறது. மொழிப்பாடமோ கணிதமோ ஆழ்ந்து படிக்கின்றனர். இலவசக்கல்வியுடன் பாடநூலும் சீருடையும் இலவசமாகவே வழங்கப்படுகின்றன. 10 வயதில் நடக்கும் பொதுப் பரீட்சையில் சித்தியடையும், குடும்ப வருமானம் குறைந்த மாணவர் களுக்கு அவர்களின் படிப்புக்காகக் குறிப்பிட்ட உதவித்தொகை பாடசாலைக்கல்வி (7ஆம் பக்கம் பார்க்க..)

# அணு ஆயுதம் உருவாக்கும் நிலையில் ஈரான் சர்வதேச அணுசக்தி நிறுவனம் எச்சரிக்கை



ஈரான் அணு ஆயுதத்தை உருவாக்கும் அபாயகரமான நிலையை நெருங்கியுள்ளதாக ஐ.நா., சபையின் அணு ஆயுத கண்காணிப்புக் குழுவின் தலைவர் ரபேல் குரோஸி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஈரான் அணுசக்தி திட்டம் தொடர்பாக அமெரிக்க முன்னாள் அதிபர் ஒபாமா ஆட்சிக் காலத்தில் ஒப்பந்தம் போடப்பட்டது. ஈரான் அணு ஆயுதம் தயாரிக்க கூடாது. அதன் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்கப்படும் என்பது அந்த ஒப்பந்தத்தின் சாராம்சம்.

பிறகு அமெரிக்க அதிபராக டிரம்ப் பதவியேற்றதும் அந்த ஒப்பந்தத்தை ரத்து செய்தார். இதன் பிறகு அந்நாட்டின் மீது பல பொருளாதார தடைகள் விதிக்கப்பட்டன. இருப்பினும், ஈரான் தொடர்ந்து அணு ஆயுதம் தயாரிப்பதற்கான பணிகளில் ஈடுபட்டு உள்ளது. இது தொடர்பாக பேச்சுவார்த்தைக்கு அழைத்தும் ஈரான் மறுப்பு தெரிவித்தது. இதையடுத்து, அணுஆயுத தயாரிப்புக்கு எதிரான ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டும் என்று ஈரானுக்கு அதிபர் டிரம்ப் தொடர்ந்து மிரட்டல் விடுத்து வந்தார்.

இந்த சூழலில், ஓமன் தலைநகர் மஸ்கட்டில் இருநாடுகளுக்கு இடையே பேச்சுவார்தை நடத்தப்பட்டது. ஆக்கப்பூர்வமான முறையில் பேச்சுவார்த்தை நடந்தாலும், எந்த உடன்பாடும் எட்டப்படவில்லை. இதைத் தொடர்ந்து, வரும் 19ம் தேதி இருநாடுகளிடையே மீண்டும் பேச்சுவார்த்தை நடைபெற இருக்கிறது.

இந்த நிலையில், ஈரான் அணு ஆயுதத்தை உருவாக்கும் அபாயகரமான நிலையை நெருங்கியுள்ளதாக ஐ.நா., சபையின் அணு ஆயுத கண்காணிப்புக் குழுவின் தலைவர் ரபேல் குரோஸி எச்சரிக்கை விடுத்துள்ளார். அணு ஆயுத தயாரிப்பு குறித்து ஈரான் நாட்டு அதிகாரிகளுடன் தெஹ்ரானில் பேச்சு நடத்துவதற்கு முன்பாக இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

மேலும், அவர் கூறியதாவது: ஈரான் அணு ஆயுத தயாரிப்புக்கு தேவையான அனைத்தையும் தயார் நிலையில் வைத்துள்ளது. ஒருநாள் அதனை அவர்கள் இணைப்பார்கள். எங்களிடம் அணு ஆயுதங்கள் இல்லை என்று வாய்மொழியில் சொல்லும் உத்தரவாதங்களை விட, ஆதாரப்பூர்வமான உத்தரவாதங்களையே சர்வதேச நாடுகள் விரும்புகின்றன. எனவே, நாங்கள் அதனை உறுதி செய்ய வேண்டும், எனக் கூறினார். (ஐ)



# படகில் பற்றியது தீ: காங்கோவில் 50 பேர் உயிரிழந்த சோகம்!


காங்கோவில் படகில் தீ விபத்து ஏற்பட்டதில் 50 பேர் உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

மத்திய ஆப்ரிக்க நாடான காங்கோவில் உள்ள ஆறுகளில் படகு போக்குவரத்து முக்கியமான ஒன்றாக இருக்கிறது. அங்கு வசிக்கும் மக்கள் படகு போக்குவரத்தை விரும்புகின்றனர். இந்நிலையில், வடமேற்கு காங்கோவில் உள்ள மடான் குமு துறைமுகத்தில் இருந்து போலோம்பா பகுதிக்கு ஒரு மோட்டார் படகில் 400க்கும் மேற்பட்டோர் பயணம் மேற்கொண்டனர்.

பன்டாக்கா பகுதியில் படகு சென்று கொண்டிருந்த போது பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. படகில் பயணம் செய்தவர்கள் தீ விபத்தில் இருந்து தப்பிக்க ஆற்றில் குதித்தனர். இதில் படகு ஆற்றில் கவிழ்ந்தது. இந்த விபத்தில் 50 பேர் உயிரிழந்தனர். இதில் பெண்கள் மற்றும் குழந்தைகள் அடங்குவர். சம்பவ இடத்திற்கு விரைந்த மீட்பு படையினர் நீண்ட நேரம் போராடி 100க்கும் மேற்பட்டவர்களை லேசான காயத்துடன் மீட்டனர்.

இவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளனர். காணாமல் போனவர்களை தேடும் பணி தீவிரமாக நடந்து வருகிறது. படகில் பெண் ஒருவர் சமையல் செய்த போது தீ விபத்து ஏற்பட்டதாக விசாரணையில் தெரியவந்தது.

# சிறைச்சாலை முன் கார்களுக்கு தீ வைப்பு:



பிரான்ஸ் நாட்டில் உள்ள சிறைச்சாலைகள் முன் நிறுத்தப்பட்டுள்ள கார்களுக்கு தீ வைத்து மர்ம நபர்கள் தாக்குதல் நடத்தி வருகிறார்கள்.

பிரான்சில் கடந்த நான்கு நாட்களுக்கு முன்பு இரவில் பல்வேறு சிறைகள் முன் நிறுத்தப்பட்டிருந்த சிறை அலுவலர்களின் 21 கார்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டன.

கார்களில் சில தீவைத்து நாசம் செய்யப்பட்டிருந்தன. துப்பாக்கிக் குண்டுகளும் பாய்ந்திருந்தன.

நேற்றும் டராஸ்கான் நகரில் உள்ள சிறைச்சா லைக்கு வெளியே நிறுத்தப்பட்டிருந்த மூன்று கார்களுக்கு தீ வைக்கப்பட்டிருந்தது.

நாங்குநேரி மாணவன் சின்னதுரை மீது மீண்டும் தாக்குதல் மருத்துவமனையில் பதற்றம்

மேலும் தெற்கு பிரான்சிலுள்ள ஏக்ஸ்-என் நகரிலும் சிறையில் பணியாற்றும் ஒரு போலீசாரின் வீட்டின் முன் நிறுத்தப்பட்டிருந்த அவரது காருக்கு தீ வைக்கப்பட்டது.

இந்த தாக்குதல் குறித்து பிரான்ஸ் நீதித்துறை அமைச்சர் ஜெரால்டு தார்மேனியன் கூறியதாவது:

போதைக் கடத்தல் கும்பல்கள் மீது பிரான்ஸ் அரசு நடவடிக்கை எடுத்துவருகிறது. இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் இந்த தாக்குதல் நடத்தப் படுகிறது. இவ்வாறு தாக்குதல் நடத்துவது தொடர்பான குற்றவாளிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு ஜெரால்டு தார்மேனியன் கூறினார். (ஐ)



# பேச்சுவார்த்தைக்கு வாங்க் வர்த்தகத்தில் அச்சுறுத்தல் கூடாது அமெரிக்காவுக்கு சீனா வலியுறுத்தல்

*சீனா, அமெரிக்கா ஆகிய இருநாடுகளுக்கு இடையே வர்த்தகப் போர் தீவிரம் அடைந்துள்ளது. ''பிளாக் மெயில், அச்சுறுத்தல் விடுக்க கூடாது'' என சீனாவுக்கு அமெரிக்கா வலியுறுத்தி உள்ளது.*

*சீன பொருட்களுக்கு இதுவரை 145 சதவீதமாக இருந்த இறக்குமதி வரியை 245 சதவீதமாக உயர்த்துவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது. சீனாவின் பழிவாங்கும் நடவடிக்கைக்கு பதிலடி கொடுப்பதற்காக, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது என வெள்ளை மாளிகை விளக்கம் அளித்துள்ளது. அமெரிக்கா- சீனா ஆகிய இருநாடுகளுக்கு இடையே வர்த்தகப் போர் தீவிரம் அடைந்துள்ளது. இந்நிலையில், ''பிளாக்மெயில், அச்சுறுத்தல் விடுக்க கூடாது'' என சீனாவுக்கு அமெரிக்கா வலியுறுத்தி உள்ளது. இது குறித்து சீனா வெளியுறவுத் துறை கூறியதாவது: அமெரிக்கா வர்த்தகப் போரை தொடங்கியது. நமது நியாயமான நலன்களையும், சர்வதேச நியாயத்தையும், நீதியையும் பாதுகாக்க சீனா தேவையான எதிர் நடவடிக்கைகளை எடுத்தது. அமெரிக்கா உண்மையிலேயே பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண விரும்பினால், அதிகபட்ச அழுத்தத்தைப் பயன்படுத்துவதை நிறுத்தி விட்டு, சீனாவை பிளாக்மெயில் செய்வதையும், மிரட்டுவதையும் நிறுத்த வேண்டும். சமத்துவம், மரியாதை மற்றும் பரஸ்பர நன்மை ஆகியவற்றின் அடிப்படையில் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். இவ்வாறு சீனா வெளியுறவுத்துறை கூறியுள்ளது. (ஐ)*

## ஏப்ரல்...

வாக்களிப்பு எதிர்வரும் 24, 25, 28 மற்றும் 29 ஆகிய திகதிகளில் நடைபெறும்.

முன்னர் இது எதிர்வரும் 22, 23 மற்றும் 24 ஆகிய திகதிகளில் நடைபெறும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்திருந்தது. அந்த மூன்று தினங்களிலும் தபால் மூலம் வாக்களிக்க முடியாத அரச ஊழியர்கள் எதிர்வரும் 28 மற்றும் 29 ஆகிய திகதிகளில் தபால் மூலம் வாக்களிக்க வாய்ப்பு வழங்கப்படும் என்று ஆணைக்குழு முன்னர் தெரிவித்திருந்தது.

அது இப்போது எதிர்வரும் 24, 25, 28 மற்றும் 29 ஆகிய திகதிகளில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## வவுனியாவில்...

அலைகரைப் பகுதியில் ,ருந்து நேற்று மாலை ,ளைஞர் ஒருவரின் சடலம் ,ரத்தக் கறைக் காயங்களுடன் மீட்கப்பட்டிருந்தது. சடலமாக மீட்கப்பட்டவர் கடந்த புதுவருட தினமன்று காணாமல்போயிருந்த வவுனியா விநாயகபுரம் பகுதியைச் சேர்ந்த கோபிதாசன் (வயது 33) என்பவருடையது என அடையாளம் காணப்பட்டிருந்தது.

,ந்தச் சடலத்தை நேற்று மாலை பார்வையிட்ட பதில் நீதவான் அன்ரன் புனிதநாயகம் சடலம் மீதான உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உத்தரவிட்டமையுடன், ,து தொடர்பான துரித விசாரணைகளை முன்னெடுக்குமாறும் பொலிஸாரைப் பணித்திருந்தார்.

வவுனியா வைத்தியசாலையின் பிணவறை குளிரூட்டிகள் பழுதடைந்த நிலையில் காணப்படுவதால், அந்தச் சடலம் செட்டிகுளம் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. ,ந்நிலையில், வவுனியா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி வராமையால சடலம் உடற்கூற்றுப் பரிசோதனை மேற்கொள்ளப்படாது, செட்டிகுளம் வைத்தியசாலையின் பிரேத அறையில் தொடர்ந்தும் வைக்கப்பட்டுள்ளது என்று ,றந்தவரின் உறவினர்கள் தெரிவித்தனர்.

## வசாவிளான்...

யாழ்ப்பாணத்தில் விடுவிக்கப்படாத காணிகள் தொடர்பாக வலிகாமம் வடக்கு காணிகள் விடுவிப்புக்கான அமையம் என்ற அமைப்பின் ஏற்பாட்டில் வசாவிளான் சந்தியில் ஊடகவியலாளர் சந்திப்பு ,டம்பெற்றது .

ஊடகவியலாளர் சந்திப்பு ஆரம்பிப்பதற்கு முன்னதாக அங்கு வந்த பலாலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸார் ஊடக சந்திப்புக்கு வந்திருந்தவர்களுடன் தர்க்கத்தில் ஈடுபட்டனர்.

இது உயர் பாதுகாப்பு வலயம் எனவும், ,ங்கு கூட்டம் கூட முடியாது எனவும் ஊடக சந்திப்பு ஏற்பாட்டாளர்களுடன் பலாலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி முரண்பாட்டில் ஈடுபட்டார்.

தாம் எமது காணிகள் விடுவிப்பை வலியுறுத்தி ஊடக சந்திப்பை நடத்தவே தாம் வந்ததாகவும், போராட்டத்தில் ஈடுபடவில்லை என்றும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இதனையடுத்து அங்கு ஊடக சந்திப்புக்கு வந்திருந்தவர்களின் தேசிய அடையாள அட்டையை வாங்கி பெயர்களைப் பதிவு செய்த பொலிஸார் அங்கு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தவர்களைக் காணொளி மற்றும் புகைப்படங்களை எடுத்து அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டனர்.

## யாழ்ப்பாணம்....

சிறைச்சாலை சமையல் கூடத்தில் தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

அதனை அடுத்து ஒரு கைதி மற்றைய கைதி மீது கொதிநீரை வீசியுள்ளார்.

கொதிநீர் வீச்சுக்கு உள்ளனானவர் காயமடைந்த நிலையில், யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கொதிநீரை வீசிய கைதி தொடர்பில் சிறைச்சாலை நிர்வாகம் விசாரணைகளை முன்னெடுத்துள்ள நிலையில், பொலிஸார் ஊடாக சட்ட நடவடிக்கையும் எடுக்கவுள்ளது.

## ஜனாதிபதி...

தேசிய மக்கள் சக்தியின் சார்பில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளில் போட்டியிடும் வேட்பாளர்கள் மற்றும் அந்தக் கட்சியின் ஆதரவாளர்கள் எனப் பெருமளவிலானோர் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டார்கள்.

## நானும்...

“கடந்த காலங்களில் இலஞ்ச, ஊழல், மோசடிகளில் ஈடுபட்ட நபர்களுக்கு எதிராகச் சட்டம் செயற்படும். அவர்களின் முகவரி மகசின் சிறைச்சாலை என்று மாறுவது உறுதியாகும்.

முன்னாள் அமைச்சர்கள் மற்றும் முதலமைச்சர்களும் கம்பி எண்ணி வருகின்றார்கள்.

அதேபோல் படுகொலைகளில் ஈடுபட்டவர்கள், ஆட்கடத்தல்களில் ஈடுபட்டவர்களுக்கு எதிராகவும் சட்டம் செயற்படும்.

நாம் இவ்வாறு செயற்படும்போது தேசிய மக்கள் சக்தி அரசியல் பழிவாங்கலில் ஈடுபடுவதாகக் கொக்கரிக்கின்றனர். எமக்கு எவருடனும் தனிப்பட்ட பிரச்சினை கிடையாது. குற்றமிழைத்தவர்களுக்கு மன்னிப்பும் கிடையாது. சட்டத்தை நாம் கையில் எடுக்கமாட்டோம். நீதிமன்றம் ஊடாகவே அதற்குரிய பணி இடம்பெறும்.

வடக்கிலும் மண் கடத்தல்காரர்கள் உள்ளார்கள். ஆட்களைக் கடத்தியவர்கள் உள்ளார்கள். ஊடகவியலாளர்களைக் கொலை செய்தவர்கள் இருக்கின்றார்கள். மக்களின் காணிகளை அபகரித்தவர்கள் இருக்கின்றார்கள். இவர்களுக்கு எதிராகவும் வெகுவிரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

மக்களின் நிம்மதியைச் சீர்குலைத்தவர்கள், தற்போது நடுங்க ஆரம்பித்துள்ளனர். சந்திரசேகற் ரௌடி எனவும் கூறத்தொடங்கியுள்ளனர். என்னை ரௌடி என அழைப்பது மகிழ்ச்சி. மக்களுக்காகச் செயற்படுகின்றபோது, மக்களுக்காகக் குரல் கொடுக்கின்றபோது, மக்களுக்காக எம்மை அர்ப்பணிக்கின்றபோது அதைப் பார்த்து ரௌடித்தனம் என்கின்றனர்.

இதுதான் ரௌடித்தனம் எனில் அதனை ஏற்றுக்கொள்ள நான் தயார். கடந்த காலங்களில் ரணில் விக்கிரமசிங்கவின் பைல்களைத் தூக்கித் திரிந்தவர்கள்தான் இப்படிச் சொல்கின்றனர்.

புலிகள் அமைப்பு தடை செய்யப்பட்டபோது அதனை வரவேற்றவர்கள், இன்றைக்கு தாங்கள்தான் புலிகள் அமைப்பின் அர்ப்பணிப்பு மிக்க தலைவர்கள் எனக் கூறிக்கொள்கின்றனர். புலிகள் காலத்தில் துரோகி முத்திரை குத்தப்பட்டவர்கள் இவர்கள்.” - என்றார்.




# தேர்தல் முறைப்பாடுகள் தொடர்பில் பொலிஸ் ஊடகப் பிரிவு அறிக்கை!

கொழும்பு, ஏப் 17

தேர்தல் முறைப்பாடுகள் தொடர்பாக கடந்த மார்ச் மாதம் 3 ஆம் திகதி முதல் நேற்று (16) வரை 18 வேட்பாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு அறிக்கை ஒன்றை வெளியிட்டு தெரிவித்துள்ளது.

அத்துடன் குறித்த காலப் பகுதியில், 62 கட்சி ஆதரவாளர்களும் 14 வாகனங்களும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் தேர்தல் தொடர்பான 38 குற்றவியல் முறைப்பாடுகளும், தேர்தல் சட்டங்களை மீறிய 138 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# கல்வியா – செல்வமா – உயிரா?.......

முடியும்வரை ஒவ்வொரு மாதமும் வழங்கப்படுகிறது. அதற்காக, ஐந்தாம் வகுப்பு பயிலும் மாணவர்களைப் பெற்றோர் கசக்கிப்பிழியும் சூழலையும் பார்க்க முடிகிறது.

பாடசாலைக்கல்விக்குப் பின் தேசியக் கல்வியியல் கல்லூரிகளில் இணைந்து அரசு உதவிகளைப் பெற்று கல்வி பயின்று பட்டம் பெற்றுக்கொள்ள முடியும். இலங்கை யூ.ஜி.சி யால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தில் பட்டப்படிப்பு முடித்த ஒவ்வொருவருக்கும் எப்படியும் ஓர் அரசாங்க வேலை காத்துக்கொண்டிருக்கிறது. ஆனால், மேல்நிலை வகுப்பு உயர்தர பரீட்சை முடிக்கும் அனைவரும் பல்கலைக்கழகம் செல்ல முடியாது என்பதுதான் இங்குள்ள பிரச்சினை. ஏனெனில், இலங்கையில் தற்போதுள்ள 15 பல்கலைக்கழகங்களால், அனைவருக்கும் உயர்கல்வி கொடுக்கும் கட்டமைப்புகள் இல்லை. 25000 மாணவர்களை மட்டுமே பல்கலைக்கழகத்திற்குள் நுழைய, மீதியுள்ள 30000 மாணவர்கள் தகமை பெற்றும், அரசு பல்கலைக்கழகங்களில் படிக்கும் வாய்ப்பு கிடைக்காமல் போகிறது. குறிப்பிட்டளவு வாய்ப்புகளை பாரியளவு மக்களுக்கு வழங்குவதில் இலங்கை எதிர்நோக்கும் சவால்களின் விளைவாக மாணவர்கள் போட்டி போட்டு தங்களது வாய்ப்புகளைத் தக்க வைத்துக்கொள்ளப் போராடுகிறார்கள். வறிய நிலையிலிருக்கும் ஒருவரது பிள்ளைகூடத் தனது திறமையை வெளிப்படுத்தி கல்வி யில் உயர் மட்டங்களை அடையலாம் என்ற நிலையில் இன்றைய கல்வி நிலை இருப்பது பாராட்டத்தக்கது. 1980இல் சர்வதேசப் பாடசாலைகள் வரத் துவங்கின. பெரும்பானமையான அரசுப் பாடசாலைகள் இருந்தாலும் ஆங்காங்கே தனியார் பாடசாலைகளையும் காண முடிகிறது. யுத்தகாலத்தில் போர்ப்பயிற்சி பெற்ற சான்றிதழ் இருந்தால் மட்டுமே உயர்கல்வி படிக்கமுடியும் என்ற நிலையும் இருந்திருக்கிறது. “ஓ.எல். (பன்னிரண்டாம் வகுப்பு) தேர்வு மரத்தடியில் எழுதிக்கொண்டிருக்கும்போது வானில் வட்டமிட ஆரம்பித்தன செல் அடிக்கும் போர் விமானங்கள். எழுதியதை அப்படியே போட்டுவிட்டு, அருகிலிருந்த பதுங்குகுழிக்குள் ஒளிந்திருந்துவிட்டு, விமானம் ஷெல் அடித்து நாசம் செய்து போனபின், வெளியே வந்து தேர்வைத் தொடர்ந்தோம்” என லதா கந்தையா சொல்லும்போதே உடல் நடுங்கியது. “அன்றைய காலகட்டத்தில் காடுகளிலும் பதுங்கு குழிகளிலும் ஓடிஒளிந்த தேவாலயங்களிலும் அகதிகள் முகாம்களிலும் தான் எங்களுக்கு கல்வி வாய்த்தது. ஆனால், நாளை இருப்போமா, மரணிப்போமா என்ற நிலையிலும்கூட கல்வியை நாங்கள் கைவிடவில்லை, கல்வியா, செல்வமா, உயிரா எது வேண்டும் என்றால், கல்வியைத்தான் நாங்கள் கைக்கொள்வோம்” எனக்கூறி சிரிக்கிறார் லதா.

இலவசக்கல்வி மூலம் மட்டுமே மருத்துவர்கள் உருவாகிறார்கள். தனியார் மருத்துவப் பல்கலைக்கழகங்கள் என்ற ஒன்றை அறியாதவர்களாகவே இருக்கின்றனர். இங்கு இலவசமாகப் பல்கலைக்கழகக் கல்வி முடித்துவிட்டு, வெளிநாடுகளுக்குச் சென்று பணிபுரியும் போக்கும் அதிக அளவில் காணப்படுகிறது. அரசுத் துறையில் இருப்போரைவிடத் தனியார் துறையில் பணிபுரிவோருக்கே அதிக ஊதியம் என்பது நடைமுறையில் உள்ளது. மருத்துவர்கள் அதிக அளவிலான ஊதியத்தையும் அதற்கு அடுத்த நிலையில் வங்கிகளில் பணிபுரிவோரும் பெறுகின்றனர். இந்தியாவோடு ஒப்பிடுகையில் ஆசிரியர்களுக்கான ஊதியம் என்பது மிகக் குறைவாகவே இருக்கிறது. அதி உயர்ந்த கல்வியாக மருத்துவம் பார்க்கப்பட்டாலும், வழக்குரைஞர் பணிக்கு அதிக மரியாதை இருக்கிறது. அரசுத் துறையின் உயர் அதிகாரிகளும் மாவட்ட ஆட்சியாளர்களும்கூட சட்டம் பயில முன்வருவது கண்டு ஆச்சர்யப்பட்டிருக்கிறேன்.

இலங்கையின் தேசிய மொழிகளான தமிழும் சிங்களமும் நிர்வாகம், கல்வி, நீதி போன்ற துறைகளிலும் ஆங்கிலம் வணிகத் துறையிலும் பயன்பாட்டில் உள்ளது. ஆங்கிலேயர்கள் ஆட்சிக்காலத்தில் உருவாக்கப்பட்ட கல்வித்திட்டங்கள் தற்போதுவரை பின்பற்றப்படுவதால், பிரிட்டிஷ் ஆங்கிலம் இலங்கைத் தமிழர்களால் பயன்படுத்தப்படுகிறது. ஈழத்தமிழர்களின் ஆங்கில உச்சரிப்பு மலையாளிகள் போலவே இருக்கிறது.

“ஆனால், எங்களுக்குக் கிடைத்த கல்வி இனப்பிரச்சினையைத் தீர்க்க தவறியது. இனப்படுகொலையை உருவாக்கியது, எங்கட இந்தக் கல்விமுறையில் வந்த கல்விமான்கள்தாம் இனப்பிரச்சினையை உற்பத்தி செய்தார்கள், இலவசக்கல்வியை மட்டும் நாங்கள் வைத்திருக்கவில்லை, இலங்கையின் மூன்று இனங்களுக்குள்ளும் மோதலையும் காயங்களையும் வைத்திருக்கிறோம். இலங்கையின் கல்வி முறைமை வெற்றி பெற்ற கல்வி முறைமையல்ல” என்கிறார், அரசியல் ஆய்வாளரான நிலாந்தன். இலங்கையில் சமீபக் காலமாகப் பாடசாலைக் கல்வி நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. 2019ஆம் ஆண்டு ஏப்ரல் 21ஆம் தேதி நடத்தப்பட்ட ஈஸ்டர் குண்டுத் தாக்குதலை அடுத்து, பாடசாலை விடுமுறைகளுக்குப் பின்னால் சற்று வழமைக்குத் திரும்பிய கல்வி நடவடிக்கை, 2020 முதல் கோவிட் பெருந்தொற்றால் பெரிதும் பாதிக்கப்பட்டது. கோவிட் நிலமைகள் முழுமையாகக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டுள்ள போதிலும் பொருளாதார நெருக்கடி காரணமாக கல்வி நடவடிக்கைகள் 2022 இல் மீண்டும் பாதிக்கப்பட்டுள்ளன. யூனிசெப் நிறுவனத்தின் சமீபத்திய ஆய்வின்மூலம் மலையகத் தோட்டப் பகுதியைச் சேர்ந்த பிள்ளைகளே அதிக அளவில் ஆரம்பக் கல்வியைக் கைவிடுவதாகத் தெரியவந்துள்ளது.

இன்றைய பொருளாதாரச் சூழ்நிலையில் நாட்டிற்கு அந்நிய செலாவணியைக் கொண்டு வருவதற்கான வேலைத் திட்டங்களின் ஒரு பகுதியாக அரச ஊழியர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பும் திட்டம் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அரச ஊழியர்கள் மத்தியில் ஆசிரியர்களே அதிக அளவில் வெளிநாடுகளுக்குச் செல்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருவதை அவதானிக்க முடிகிறது. வெளிநாட்டு புலம்பெயர்வு என்பது, ஆசிரியர்களின் தனிப்பட்ட விருப்பமாக இருந்தாலும், ஆசிரியர்கள் பெருமளவில் வெளியேறினால் மாணவர்களின் கல்வி பெரிதும் பாதிக்கப்படும் என்பதில் சந்தேகமில்லை. ஆசிரியர்கள் எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடியே அவர்களை வெளிநாடு செல்லத் தூண்டுகிறது. “ 92.3 சதவீதம் கல்வியறிவு கொண்ட இலங்கையில் அதை 100 சதவீதமாக மாற்றுவதே தமது இலக்கு” என்று கூறும் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனவின் இலக்கை அடைவதில் தற்போதைய பிரச்சினைகள் பெரும் சவால்களாக இருந்தாலும்கூட, அவற்றை வெற்றிகொண்டு இலங்கைக் கல்வித்துறை மீண்டுவந்துவிடும் என்பதே ஒவ்வோர் இலங்கையரின் ஆகப்பெரும் நம்பிக்கையாக இருக்கிறது.


முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557


JRIDE
இலங்கையின் பயணிகள் செயலி
SRI LANKA'S
TAXI APP FROM JAFFNA
5%
இப்போது நாம்
இலங்கை முழுவதும்
காத்திருப்புக்கு விடுதலை!
www.jride.lk
மகிழ்ச்சியான பாதுகாப்பான பயணம் திருப்தியான கட்டணம்!